சிவமயம்

# சங்கீர்த்தனம்




அமரர்

## செல்வன் சுதாகரன் சங்கீர்த்தன்

அவர்களின் நினைவாக

**10-01-2016**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் மாவட்டம் வடமராட்சிப் பிரிவில்
இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டியைப்
பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

# அமரர்
# செல்வன் சுதாகரன் சங்கீர்த்தன்

அவர்களின் சிவப்பேறு குறித்த

## நினைவு மலர்

# 10-01-2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# சமர்ப்பணம்

அன்பினில் திழைக்க வைத்து
பாசத்தில் எமையெல்லாம் %ழ்கஊத்து
பண்பிந்கு , லக்கணம் ஊட்ஊ
நன்னெநி நீ நடக்கையிலே
நாமெல்லாம் மகிழ்ந்திருந்தோம்
எம் குலக் கொழுந்து படருமென்று
பார்த்திருக்க நின்பெருமை கேட்ஊருக்க
பாதிவழி துவண்டு கருகிவிட்ட கோலம் கண்டு
பதநி நின்நோம் கதநி நின்நோம்
உம் செல்வன் நானன்நோ உமைவிட்டுச்
செல்லுவேன் என உணர்த்தி
< சன் திருவஊ நாஊவிட்ட
எம் செல்வன் பாதத்திந்கு

இங்ஙனம்

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# எம் இனிய கனியமுதம்

அன்னை மடியில் 17 * 06 * 1996



ஆண்டவன் மடியில் 27 * 11 * 2015





## அமரர்

# சுதாகரன் - சங்கீர்த்தன்

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு மன்மதம் கார்த்திகை இருபத்தேழில்
ஆனதோர் அபரபக்க துதியைத் திதியதனில் செல்லும்
சுதாகரன் சங்கீர்த்தன் மண்ணீத்துச் சென்றான்
சிவன்தாள் என்றே சாற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## விநாயகர் துதி

பிடியத னுருகுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடுமவரிடர்
கடி கணபதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென்றடியார்
தம்மடி போற்றினசப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின்றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியும் தொழிலர் பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞானங்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை யமர்ந்தாரே.

## திருவாசகம்

பால் நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உவப்பிலா ஆனந்தமாய்
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனை
திருவிழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகலாம் உணர்ந்து ஓதுதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

******

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை துதிப்பாக்கள்

## துவாளி கண்ணகை அம்மன் துதி

சூழும் வயல் நடுவே
சோபனமாய் இருப்பவளே
ஆயிரம் கண் உடையவளே
கருணையுள்ளம் கொண்டவளே
நன் பூ தலத்தான் நாடிவந்தான் நின்பாதம்
நிழலாய் நீயிருந்து காத்தருள்வாய் எம் தாயே.

## இமையாணன் ஸ்ரீமுருகன் துதி

இமை பதி வாழும் இறைவா
இன்னல்கள் தீர்த்து வைக்கும் குமரா
வேல் கொண்டு விளையறுக்கும் வேலா
அழகெல்லாம் திரண்டாடும் முருகா
உன் நிழலில் விளையாடிய எம் மைந்தன்
இளைப்பாற வந்துள்ளான் ஏற்றருள்வாய்.

## செல்வச்சந்நிதி முருகன் துதி

வடிவேல் கரம் கொண்டு உலகாழும் வேலா
அன்னதானக் கந்தனாய் ஆற்றோரம் இருப்பவனே
பசித்திருப்போர் புசித்துச் செல்லும் சந்நிதியானே
பிணிதீர்த்துக் குணமாக்கும் கருணாகரனே
உன்பதம் நாடிவந்த எம்செல்வனுக்கு
காவலனாய் நீயிருந்து நற்கதியருள்வாயே.

## வல்லிபுர ஆழ்வார் துதி

கரு நீல வண்ணனாய் பதியாளும் பரந்தாமா
வெண் மணற் பரப்பினிலே விளையாடும் கோவிந்தா
குறும்புகள் செய்து குலம் காக்கும் கோபாலா
எம் குலக் கொழுந்து நின்பதம் சேர்ந்தான் ஏற்றருள்வாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்
# செல்வன் சுதாகரன் - சங்கீர்த்தன்
# அவர்களின் வாழ்க்கைச் சுவட்டில்

ஈழ மணித் திருநாட்டின் தலையாம் வடமராட்சிப் பதியதனில் பூவத்தோட்டம், இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டியில் சுதாகரன் - கோமதி தம்பதியரின் இல்லற வாழ்வினிலே ஈடிணை இல்லாச் செல்வமென 1996ம் ஆண்டு ஆனி மாதம் 17ம் நாள் மூன்றாவது முத்தென அவதரித்தவர் செல்வன் சுதாகரன் - சங்கீர்த்தன் அவர்கள். இவரின் உடன் பிறந்த சொத்துக்களென மூத்த சகோதரி சுதாகரன்- கோபனா, மூத்த சகோதரன் சுதாகரன்- சுலக்ஷன், இளைய சகோதரன் சுதாகரன்- அபிஷன் ஆகியோர் விளங்கினர்.

உறவுகளின் பேணலில் இவர்கள் சிறப்புற வளர்ந்து வரும் காலத்திலே அமரர் சங்கீர்த்தன் அவர்கள் தமது ஆரம்பக் கல்வியினை யா/இமையாணன் அ.த.க. வித்தியாலயத்தில் பயின்று, பண்பும் பணிவும் கொண்டு கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார். இவ்வாறு விளங்கும் காலத்திலே மாணவ சாரணீயப் படையணியிலும் மிளிர்ந்துள்ளார். சாதாரண தரம் கடந்து உயர் கல்வியினை தொடர்வதற்கு யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் இணைந்து கொண்டார்.

இவ்வேளையிலே சிறந்த விளையாட்டு வீரனாகவும் திகழ்ந்துள்ளார். தான் கல்வி கற்ற பாடசாலைகள் ஊடகவும், இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் ஊடகவும் கால்பந்தாட்டப் போட்டிகளிலே சிறந்த கோல் கீப்பராகவும் விளங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


செய்யும் தொழில் அனைத்திலும் ஊக்கமும் விடா முயற்சியும் உடன் பிறப்பெனக் கொண்டு செயற்பட்டவர். உற்றார், உறவினர், நண்பர்கள் என அனைவரின் அன்பினையும் தனது நடை உடை, பாவனையால் தன் வசப்படுத்தி வாழ்ந்திருந்தார்.

தனது அழகுத் தோற்றத்தினால் பெண் வேடங்கள் புனைந்து “வள்ளி திருமணம்” நாடகத்தில் அழகன் முருகப் பெருமானின் துணைவியாம் வள்ளியாகவும், தாயைக் காத்த தனயனாம் “காத்தவராஜன்” நாட்டுக் கூத்தில் ஆரியமாலாவாகவும் நடித்து அன்புள்ளங்களின் பாராட்டுக்கும், சீராட்டுக்கும் ஆளாகி ஜொலித்திருந்தார்.

இவ்வாறாக இருந்தாலும், இறந்தாலும் பேர் சொல்ல வேண்டும். “இவர் போல யார்? என்று ஊர் சொல்ல வேண்டும்” என்ற கூற்றுக்கு இணைவாக அன்பு , பண்பு , கருணை, பாசம், என அனைத்திலும் சிறந்து பெற்ற தாயை ஈன்ற பொழுதினிற் பெரிதுவக்க வைத்து உறவுகளின் பாசப் பிணைப்பிலே வலம் வந்த வேளையிலே கொடியவனாம் காலனவனின் கொடும் பார்வையிலே சிக்கியதால் கடலாடும் ஆசை உந்த நீராடும் வேளையிலே சொந்தங்களை யெல்லாம் சோகத்தில் ஆழ்த்தி 2015-11-27ம் நாள் அன்று மண்ணுலக பந்தம் நீங்கி விண்ணுலக சொந்தம் கொண்டு இறைவன் பொற்பாதம் சரணடைந்தார்.

வாழ்க அவர் நாமம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி. .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளின் உயிர்க்கசிவில்

## தகப்பன் சுதாகரனின் தவிப்பினில்

தம்பி என்றழைத்தால் தடைதாண்டி நீ வருவாய்
தவமிருந்து நான் பெற்ற தவசீலன் நீ ஐயா
தங்கத்திலும் அருந்தங்கம் ஐயனே நீ எனக்கு
தவிக்கிறேன் துடிக்கின்றேன் துணை வேண்டும் நீ வாடா.

நோயோடு போராட பாயோடு நான் வாட
துயர் துடைக்க நானுண்டு கலங்காதே அப்பா என்றாய்
ஐயனே உன் வாக்கு அரைநொடியில் மறைந்ததென்ன
தனயனே நீ சொன்ன உபதேசம் தந்தை நான்
கேட்டிருந்தேன்
அன்பனே நீ செய்த உபசாரம் எனை உருகவைக்குதடா

தந்தையின் பொறுப்பையெல்லாம் தனயனே நீ சுமக்க
சொர்க்கமே உன் செயலில் சொக்கி நான் வியந்து நின்றேன்
பறந்தோடி வருவாயென வழிபார்த்து நானிருந்தேன்
பறந்தோடிச் சென்ற செய்தி பரிதவிக்க வைத்ததையா
உறைந்ததையா என் இதயம் உருகுதையா என் உயிரும்

## தாயார் கோமதியின் உருக்கத்தில்

"அம்மா" என்று என் செல்வனே நீ அழைக்கையிலே
அமுதமழை என் செவியினிலே பொழியுமையா
ஐயோ எனக் கதறவைத்தே ஆரமுதே ஏன் சென்றாய்
சூரிய பிம்பமென ஐயனே நீ மடி தவழ்ந்த வேளையிலே
சொர்க்கம் இதுவென்றே சொக்கி நான் நின்றேன் ஐயா
தாளாத நரகத்திலே எனைத்தள்ளி ஒளிச்சுடரே எங்கு
சென்றாய்?
வளர் பிறையின் வண்ணம் கொண்டு வடிவழகா நீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்கையிலே
விடிவெள்ளி நீயென்ற என் செல்வனே பொழுதோடு
காத்திருந்தேன்
தேவையைக் கூறு அம்மா தேடித்தீர்ப்பேன் என்று
என்திருமகனே நீ சொல்கையிலே
சொத்துக்கள் நீங்களடா சொர்க்கம் வேறெதற்கு
என்றிருந்தேன்
பாவி இவள் தேடி வைத்த பொக்கிஷமே பார்த்திருக்கப்
பறி போனதென்ன.

## சகோதரி கோபனா துயரமதில்

மூத்தவளாய் நானிருந்தும் முடிவெல்லாம் உன்கையில்
இளையவனாய் நீயிருந்தும் தலைவனாய் நடந்திருந்தாய்
முத்தான முத்தொன்று மூழ்கிவிட்ட கோலம் கண்டு
வித்தகனே நானின்று துடித்துப் போனேனடா பாசப்
பிணைப்பிலே பண்புடனே வளர்ந்திருந்தோம் அன்புப்
பிடியினிலே அரவணைப்பாய் இணைந்திருந்தோம்
கண்ணுறங்கும் வேளைவரை கதைகள் பல பேசி
நின்றோம் துன்பத்திலும் இன்பத்திலும் தோளோடு தோள்
நின்றோம் தோளும் துவண்டதடா துயரம் பெருகுதடா
ஏங்குகிறேன் தேம்புகிறேன் சங்கீர்த் நீ வாடா

## சகோதரர்கள் சுலக்ஷன், அபிஷன் கலக்கமதில்

ஒரு கொடியில் மலர்ந்தோமடா
ஒற்றுமையாய் பறந்தோமடா
எங்கு சென்றாலும் எமை அழைப்பாய்
உங்கு செல்கையில் ஏன் மறந்தாய்
முத்தமிழ்கள் என்றிருந்தோம்
ஒரு தமிழும் ஒடிந்ததென்ன
ஒரு தமிழும் ஒடிந்த தென்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லம் நம் பொறுப்பு ஏற்றம் நம் கையில்
என்றே எமைத் தேற்றி தோளிணைந்த சோதரனே
உன்தோளும் தொலைந்ததடா
நம் தோளும் தனித்ததடா.

## பேரன் கோபால் வாட்டமதில்

காலால் இடும் பணியை
தலையால் முடித்திடுவாய்
தாத்தா என்று நீ அழைக்கவில்லை
அப்பா என்றழைப்பாய்
கன்றுக் குட்டி போல் காலடி சுற்றி நிற்பாய்
விழுதாக மரம் தாங்க பலமாக நின்றேனடா
விழுதழிந்து போனதால் தள்ளாடி விட்டேனடா
என் குலம் தழைக்க வந்தாயென்று
குதூகலம் நான் கொண்டேனடா
கலங்கி இங்கு நான் வாட
கண்மணியே எங்கு சென்றாய்.

## பேர்த்தியார் இலட்சுமி உருக்கமதில்

அம்மம்மாவாக நானிருக்க என் செல்வமே
அம்மா என்றே அமுதம் பொழிவாய் ஐயா
என் வயிற்றில் பிறக்கவில்லை பிறந்த இன்பம் தந்தாய்
ஐயா
நான் பெற்ற செல்வமென பேணியுனைக் காத்தேன் ஐயா
"லட்சு" என்று நீயழைக்க லட்சம் இன்பம் கொண்டேன்
ஐயா
உச்சி முகர்ந்துன்னை உயிராக நான் காத்தேன்
கோபுர கலசமென கோமகனே உனைக் கண்டேன்
கோபுரம் சாய்ந்ததென்ன கலசமும் கவுண்ட தென்ன
வண்ண நிலவே வளர் பிறையே வந்தென்னை பாருமய்யா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரிய பேர்த்தியார் அப்புக்குட்டி- அம்மா ஏக்கத்தில்

கண்ணிறைந்து நின்றாய் ஐயா
கருத்தறிந்து செய்வாய் ஐயா
பெரியம்மாச்சி என்றழைப்பாய்
பெரும் மதிப்பும் தந்து நிற்பாய்
ஊன்று கோல் கிடைத்த தென்று
உத்தமனே நான் இருந்தேன்
வழிகாட்டி வந்ததென்றே
வடிவழகா நான் பார்த்தேன்
செய்யென்று சொல்லு முன்னே
செயலெல்லாம் முடித்து நிற்பாய்
ஆரமுதே அருஞ்சுடரே அந்நியமாய் போனதெங்கே
கனியமுதே கார்முகிலே கண் மறைந்து போன தெங்கே
பெரியம்மாச்சி ஏங்குகிறேன் ஏந்திழையே ஏன் மறந்தாய்
பாசமலரே பராய் என்னை நேசக்கரமே நாடி வா என்னை.

## மாமன்மார் கோதாஸ், ஜெயதாஸ், மணிதீபன், மணிதாஸ் மனமுருக

பூமியில் உன் ஜனனம் பூவாய் மலர்கையிலே
பூரித்து நின்றோம் ஐயா
தொட்டிலிடும் வேளையிலே- எம் சொர்க்கமே
சொப்பனங்கள் பல கண்டோம்
நாளொரு மேனியனாய் நீ வளர
நயமுடனே பார்த்து நின்றோம்
பொழுதொரு வண்ணம் கொண்டு நீ சிரிக்க
புன்னகையை கோர்த்து நின்றோம்
தோழனாக வந்தெமக்கு தோள் கொடத்து நின்றாயடா
சோராத எம் கரங்களுக்கு பலம் கொடுத்து வந்தாயடா
உத்தமனே உனைக்காக்கப் பறந்தோடி வந்தோமடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தகனே உன் வித்தையெல்லாம் விரைந்தோடி
விட்டதென்ன
பாவி எமன் பாசக்கயிறு கண்டு எம் பாசம் மறந்தனியோ
காப்பாற்றத் தெரியவில்லை கண்ணுறங்க முடியவில்லை
ஆவி பதறுதடா ஐயனே வந்திடடா..

## சிறிய தாய்மார் ஜெயமதி, கோமளா, தீபனா தவிப்பிலே

பாலூட்டவில்லை ஐயா சோறூட்டி நாம் வளர்த்தோம்
பாராட்டிச் சீராட்டி தாலாட்டி உனைப்பேணி நின்றோம்
வித்தகனே உன் வித்தையெல்லாம் கண்டு நாம் வியந்து
நின்றோம்
குறிப்பறிந்து செயலாற்ற குதித்தோடி வருவாய் ஐயா
சொல் கேட்டு நீ முடிக்க சொர்க்கமே பார்த்து நின்றோம்
ஆளுக்கொரு பேர் சொல்லி அழகனே உனை
அழைத்திடவே
பெருமிதம் நாம் கொண்டோமடா பூரித்து நின்றோமடா
பொக்கிஷமாய் உனைப் பேணி பூப்போல காத்து
நின்றோம்
பொக்கிஷமும் பொசுங்கியதோ பூவும் கருகியதோ
பொங்கியழும் எமைத்தேற்ற பாலகனே ஓடி வாடா..

## சிறிய தந்தைமார் தங்கவேல், சுசீலன் சிந்தை நெகிழ

ஏவலராய் எமை மதித்து சேவகனாய் நீ நிற்பாய்
மறுத்தொரு சொல் சொல்லமாட்டாய் சிரித்தபடி
செயலாற்றி நிற்பாய்
பாலகனே உன் பண்பு கண்டு பெருமிதம் நாம்
கொண்டோமடா
வித்தகனே உன் திறமை கண்டு வியந்து நாம்
நின்றோமடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பனே உன் குணம் கண்டு குதூகலம் நாம் கொண்டோமடா
பெற்றெடுத்த பிள்ளையைப் போல் பேணி உனைக் காத்தோமடா
எம் காவல் தோற்றதடா கண்மணியே காலனவன் கரங்களிலே
ஆறவில்லை நம் நெஞ்சம் தேறவில்லை எம்முள்ளம்
ஓடோடி வந்திடடா உத்தமனே எங்கு சென்றாய்.

## அத்தைமார் சசிகலா, தேவரத்தினா, கனிஸ்ரா, அவலத்திலே

பழகிய நாள் குறுகிய நாள் ஆனாலும்
உன் நன்நடத்தை நேசம் கொள்ள வைத்ததப்பா
எம்பாசமெல்லாம் உன்மீதே பகிர்ந்தே
நாம் கொண்டோமடா
பாராள வந்தவனே பாதிவழி நீ போக
பரிதவித்து நின்றோமடா

## உடன் பிறவாச் சகோதரர்கள் உதிஷ்ரன், கவிஷ்ரன் புலம்பலில்

சங்கீர்த்தண்ணா என்று நாம்கதற
நீ எங்கே போனாய் அண்ணா
ஓடோடி வரும் அண்ணா
ஒழித்து நிற்கும் இடமும் எங்கே
குறும்பு விளையாட்டெல்லாம்
கூடி நாம் செய்வோமே
கற்றுத்தந்த அண்ணாவே கதிகலங்க விட்டதென்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோள்மீது எமைஏற்றி எட்டாப்பொருள் எடுக்க வைப்பாய்
மடிமீது எமை இருத்தி கிட்டாப் பொருள் வாங்கித் தருவாய்
ஐயோ அண்ணா உனைத் தேடுகிறோம்
சங்கீர்த்தண்ணா எங்கே?

## மச்சாள்மார் கவின்யா, பவிஷனா மறுகலில்

சங்கி மச்சான் என்றழைத்தால்
சொக்க வைத்தே சிரித்து நிற்பாய்
சங்கதிகள் பல சொல்லி
சடுதியிலே வந்து நிற்பாய்
போனவழி தெரியவில்லை
தேடுகின்றோம் கிடைக்கவில்லை
வாராயோ மச்சானே
பாராயோ எமை இங்கு

## உற்றார், உறவினர், நண்பர்கள்

பூவாகி நீ நின்று புதுவாசம் தனை வீசினாய்
பொழுதாகி புன்னகை அதைத் தூவினாய்
வானாகி வாழ்வில் நீ விரிவாகினாய்
தேனாக இனிக்கின்ற சுவையாகினாய்
கனவாகி நின்றெங்கள் வாழ்வாகினாய்
கவிதையின் பொருளாகி நீயாகினாய்
எங்களை நீங்கியேன் தொலைவாகினாய்
நெஞ்சில் நிறைந்துமே நினைவாகினாய்

## தேற்றம்

அனடனையின் மடியில் தொடங்கிய பாதை
ஆண்டவன் மடியில் முடிவது உண்மை
முடிசூடி ஆண்ட மாமன்னன் கூட
முடிவினில் ஒரு பிடி சாம்பல் ஆவது உண்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் பூக்கள்

எம் நந்தவனத்தில் சிறகடித்து
நாதம் தந்த கீர்த்தனமே - உன்
நாதம் நின்று போனதாலே
நாலு திக்கும் தேடுகின்றோமடா?

பாதைமாறி சென்றிருந்தால்
பறந்து தான் வந்திருப்பாய் - நீ
மீண்டுவருவாய் என்று நாமிருக்க
மீளாத்துயில் கொண்டதேனடா?

பட்டங்கள் பல பெற்று பார்போற்ற வாழ்வாயென
நாம் காத்திருந்த வேளையிலே
படைத்தவன் பாதத்திலே - நீ
படுத்துறங்க சென்றதேனடா?

பாடகனாய் நடிகனாய் - பைந்தமிழ்
பேச்சாளனாய் விளையாட்டில் வீரனாய்
கல்வியில் விவேகமானவனாய் நீ திகழ்ந்ததாய்
அனைத்து திறமையும் ஒருங்கே மறைந்த மாயமென்னடா.

சாலச் சிறந்த சங்கீர்த்தா - சரித்திரம்
படைப்பாயென காத்திருந்தோம் சரித்திரமாகிய தேனடா
காலத்தால் அழியாத காவியம் நீ
காலனிடம் சென்ற மர்மம் என்னடா.

நாடகத்தில் நாயகியாய் நீ நடித்தால்
நம்புவதற்கு யாருமில்லை நீ ஆணென்று - உன்
சாதனையின் முகவுரையை காணும் முன்பே
முடிவுரையை தந்து சென்றதேனடா.

இதயத்தின் வலிதனை உணரச் செய்தாய்
இதயத்தை சருகாய் நொருங்கச் செய்தாய்
இனி வேண்டாம் இது போன்ற பேரிழப்பு
இறைவனிடம் உள்ள நீ எமக்காக வேண்டு!

உன் நினைவுகளுடன்
அன்ரி குட்டி
(கோமளா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்காத நினைவலைகள்

அமரத்துவம் அடைந்துவிட்ட சங்கீர்த்தனன் ஒரு மனிதநேயம் கொண்ட மாணவன் எனக்குறிப்பிடுவது பொருத்தமானது. ஏனெனில் அமைதி, பண்பு, பொறுமை, கடினமுயற்சி, தலைமைக்கு கீழ்படிதல், மற்றவர்களுக்கு உதவும் மனப்பாங்கு போன்ற பல அம்சங்களை அவர் தன்னுள்ளே கொண்டிருந்தார்.

அதிகாலையிலே நான் பாடசாலைக்கு வரும்போது தினமும் அவரைக் காண்பேன். மாணவனுக்குரிய சகல குணாதிசயங்களும் அவரிடத்திலே பொதிந்திருப்பதைக் கண்டு வியப்படைந்துள்ளேன்.

"உடலின் உயரமே உள்ளத்தின் உறுதி" என்று குறிப்பிடுவது போல அதிகாலையிலேயே தினமும் அவரது உடற்பயிற்சி செய்வதை நான் கண்டுள்ளேன். இவ்வாறான ஒழுங்கான, தொடர்ச்சியான பயிற்சியின் மூலம் அவர் தனது உடலையும், உள்ளத்தினையும் உறுதியாக வைத்திருந்தார்.

க.பொ.த (சா.த) வகுப்பு வரை எமது பாடசாலையான யா/இமையாணன் அ.த.க வித்தியாலயத்தில் கல்வி கற்றிருந்தார். அக்காலப் பகுதியில் அதிபர், ஆசிரியர்கள் மத்தியில் ஒரு விருப்பத்திற்குரிய மாணவனாகத் திகழ்ந்தார். கல்வியில் திறமை காட்டியதோடு மட்டடுமல்லாமல் அவருடைய காலப்பகுதியில் எமது பாடசாலையின் விளையாட்டுத் துறைக்காக பல அர்ப்பணிப்புகளைச் செய்து பாடசாலைக்கு பெருமை தேடிந்தந்துள்ளார். கால்பந்தாட்டக் குழுவில் கோல்க்காப்பாளராகச் செயற்பட்டு தன்னுடைய அதீத திறமையை வெளிக்காட்டி பலரின் பாராட்டுக்களைப் பெற்றதோடு மட்டுமல்லாமல் கால்பந்தாட்ட அணியின் வெற்றிக்கு வித்திட்டவர் என்று சொன்னால் கூட மிகையாகாது.

இவர் யா/உடுப்பிட்டி அ.மி கல்லூரியில் க.பொ.த (உ.த) வகுப்பிற்கான கல்வியைத் தொடர்ந்திருந்தார். அங்கு இவருடைய மனிதநேயச் செயற்பாடுகள், கல்விச் செயற்பாடுகள், கல்விச் செயற்பாடுகளுக்கு அப்பால் பாட இணைச் செயற்பாடுகள் போன்றவற்றில் காட்டிய ஈடுபாடுகள் பற்றி அக்கல்லூரியின் அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

, ஆசிரியர்கள் என்னோடு கதைக்கும்போது வியந்து போற்றியுள்ளனர். உயர்ந்த வகுப்பில் கல்வி கற்றுக் கொண்டிருக்கின்ற காலத்திலும் எமது பாடசாலையின் வளர்ச்சிக்காக பல்வேறு செயற்பாடுகளுக்கு தனது ஒத்துழைப்புகளை வழங்கியுள்ள ஒரு சிறப்புக்குரிய மாணவர் ஆவார். பாடசாலையின் விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா போன்ற பல நிகழ்வுகளில் இவருடைய ஒத்துழைப்பு, உதவிகள் போன்றவற்றை நாம் மறந்துவிட முடியாது.

தனது குடும்பத்தின் உயர்வுக்காக தன்னை திடப்படுத்தி ஒரு நல்ல நிலையை அடைந்து வருகின்ற வேளையில் திடீரென ஏற்பட்ட இவருடைய மறைவு அவரது குடும்பத்தினருக்கு மட்டுமல்லாமல் எமது பாடசாலைச் சமூகத்திற்கும் பெரும் இழப்பாகும்.

"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ இம் மாநிலத்தே" என்பதற்கேற்பவும் உலகில் பிறந்த நாம் அனைவரும் ஒரு நாள் இவ்வுலகை விட்டுப் பிரிய வேண்டும் என்ற நியதிக்கேற்பவும் அவரது குடும்பத்தினரும், நாமும் ஆறுதல் அடையவேண்டும்.

எனவே சங்கீரத்தன் இவ்வுலகை விட்டுப் பிரிந்தாலும் நம் கண்முன்னே அவரின் நினைவுகள் என்றும் நீங்காத நினைவலைகளாக வாழ்ந்து கொண்டே இருக்கும். அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய எமது பாடசாலைச் சமூகத்தின் சார்பில் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"ஓம் சாந்தி சாந்தி சாந்தி"

திரு.கு.ரவீந்திரன்,
அதிபர்,
யா/இமையாணன் அ.த.க வித்தியாலயம்,
வல்வெட்டித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் சுதாகரன் - சங்கீர்த்தன் அவர்களின் மாணவப்பருவ நினைவுகள்

அரிது அரிது மானுடராகப் பிறத்தல் அரிது என்ற ஒளவையாரின் வாக்கு மனிதப் பிறவியின் மகத்துவத்தினை உணர்த்துவதாக உள்ளது. அந்தவகையில் இமையாணன் கிழக்கு பாடசாலைவீதி உடுப்பிட்டிஎன்னும் இடத்தில் சுதாகரன் தம்பதிகளுக்கு 17.06.1996ந் திகதி பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை இமையாணன் அ.த.க பாடசாலையில் கற்று தரம் (11) சித்தியடைந்து யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் 2013ம் ஆண்டு க.பொ.த (உ.த) கலைப்பிரிவில் சேர்ந்து கல்வி கற்றார்.

எமது கல்லூரி மாணவர்கள் ஒழுக்கத்தில் சிறந்து விளங்குபவர்கள் அவர்களுள் ஒருவராக இவரும் விளங்கினார். அதிபராகிய எனக்கும் இவருக்கு கற்பித்த ஆசிரியர்களுக்கும் நல்ல கீழ் பணிவான மாணவனாகத் திகழ்ந்தார். அத்துடன் கரப்பந்தாட்டம், கிரிக்கெட், கால்ப்பந்தாட்டம், ஓட்டப்போட்டிகள் என்பவற்றில் முழுமனதுடன் பங்காற்றி வெற்றியீட்டி கல்லூரிக்கு பெருமை தேடித்தந்த மாணவன். 2015 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த (உ.த) பரீட்சையில் தோற்றினார். பரீட்சையில் பெறுபேற்றினைக் கூட பார்க்காமல் இயற்கையெய்தியது மிகப் பெரும் கவலையளிப்பதாகவே உள்ளது.

கல்லூரியில் நல்மாணவனாய், சக மாணவர்களின் நல்ல நண்பனாய் நல்லதோர் உழைப்பாளியாய் சமூகக் கடமைகளின் ஈடுபாடு கொண்டவனாய் வாழ்ந்து வந்த அமரர் சங்கீர்த்தனன் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து பல்கலைக்கழகம் சென்று கல்வியில் பாண்டித்தியம் பெற்று வாழக்கூடிய உடலாரோக்கியமுடையவராக இருந்தார்.

மனிதர்கள் நாம் இறைவனின் சித்தத்தை அவனின் திருவிளையாடலை, இயற்கையின் கோலத்தை எம்மால் கணிக்க முடிவதில்லை. யோகர் சுவாமிகள் சொன்னது போல எல்லாம்எப்பவோ முடிந்த காரியம் நாம் பூமியில் பிறக்கும் போது இறக்கும் திகதியையும்இறப்புக்குரிய காரணத்தையும் கூட இறைவன் குறித்து விடுகின்றான். அதில் எம்மால் மாற்றம் செய்ய முடிவதில்லை. இதுவே இயற்கையின் நியதியும். விதி வழியே அவர் சென்று விட்டார். அவரது ஆத்ம சாந்திக்கு எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திப்போமாக.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

அதிபர்,

சு.கிருஸ்ணகுமார்

யா/உடுப்பிட்டி அ.மி. கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைதியான வதனமும் வசீகரிக்கும் புன்னகையும் சங்கீர்தன்!

உன் பெயரைக் கேட்டவுடன் ஒருகணம் அதிர்ந்துவிட்டேன். ஏனெனில் என்னோடு உறவாடியவன். அனைத்தையும் அறியும் போது அமைதி இழந்தது என்மனம். யாருக்கு யார் ஆறுதல் கூறுவது. நான் கவனித்தேன் எந்த ஆசிரியர்களுக்கும்மரியாதை வழங்கத்தவறாத நல் மாணவன். அதுமட்டுமா உன்திறமைக்கும் ஆற்றலுக்கும் எல்லைகள் போட முடியாதவன். " அமைதியான வதனமும் வசீகரிக்கும் புன்னகையும்" உன்னுடன் கூடப்பிறந்தவை.

துடிதுடிப்பு இளைஞர்களுக்கு இயற்கையானது. அனைத்தையும் வெல்லும் ஆற்றலுடையது. ஆனால் அன்றையதினம் உன்னுடைய விதி வலிதாகிவிட்டது.
" எந்த ஆசிரியர்களுக்கும்மரணத்தை வென்றவர்கள் எவருமிலர்" ஆனாலும் உன்னுடைய இழப்பு ஏற்றுக் கொள் முடியாதது.

உன் கல்வி, எதிர்காலன், வாழ்வுபற்றி உன்னுடைய உறவுகள். எவ்வளவு கனவுகள், கற்பனைகளுடன் வாழ்திருப்பார்கள் அனைத்தையும் நொடிப்பொழுதில் தகர்த்தெறிந்தாயோ..!

நல்லவர்களையும் வல்லவர்களையும் இறைவன் விரைவாகவே தன் பாதங்களில் சேர்த்துக் கொள்கின்றான் போலும். உன்னை இழந்து தவிக்கும் உறவுகளுக்கும், நண்பர்களுக்கும் ஆறுதலைக் கூறுவதுடன் உன் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அந்த பரம்பொருளை பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

க.கனகேஸ்வரன்,
ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூகிழ் நிலை மொட்டொன்று கருகியது

இவ்வுலகை விட்டுப் பிரிந்த எமதன்புக்குரிய மாணவன் சுதாகர் சங்கீர்த்தன் எதிர்பாராத வகையில் அகால மரணமடைந்தமை எம் எல்லோருக்கும் தாங்கொணத் துயரத்தைத் தருகிறது. அன்னார் யா/இமையாணன் அ.த.க. வித்தியாலயத்தில் தரம் 1 இலிருந்து தரம் 11 வரை கல்வி கற்றவர். இவர் கல்வியில் மட்டுமல்ல இணைப்பாடவிதானச செயற்பாடுகளிலும் முதன்மை மாணவராகத் திகழ்ந்தவர்.

அன்னாரின் உயர்ந்த தோற்றம் இவரது உயர்ந்த எண்ணங்கள், சிந்தனைகள் யாவற்றையும் வெளிப்படுத்துவதாய் அமைந்திருந்ததது. இவர் கூடுதலான நேரத்தைப் பாடசாலையிலேயே கழித்திருகின்றார், இவரது புன்சிரிப்பு சாந்தமான போக்கு, பிறருக்கு உதவி செய்யும் மனபாங்கு, சிந்தித்து செயலாற்றும் திறன் இவை யாவும் ஆசிரியர்கள் அனைவரையும் கவர்ந்திருந்தது.

உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், கிரிக்கற் போன்ற பெரு விளையாட்டுக்களில் பங்குபற்றி வடமராட்சி வலயத்தில் முதலிடத்தைப் பெற்ற அணியின் அங்கத்தவராக இருந்தார். ரு 17 உடற்பயிற்சி அணியின் தலைவராக இருந்து சிறப்பாகச் செயலாற்றியவர். பாடுந் திறன் கொண்டவர், நடிப்பாற்றல் இவருடன் இயல்பாகவே கலந்திருந்தது. க.பொ.த (சா.த) வகுப்பில் கற்றுக் கொண்டிருந்த போது நடைபெற்ற பரிசளிப்பு விழாவிலே பெண் வேஷத்தில் நடித்துப் பலரின் பாராட்டுதலையும் பெற்றவர். பாடசாலை மன்றங்களின் தலைவராகவும், இல்லத்தலைவராகவும் இருந்து சிறப்புடன் செயலாற்றியவர்.

இவர் கல்வியில் மடடுமல்ல இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் தன் ஆற்றலை வெளிப்படுத்தி எல்லோர் மனதிலும் நிறைந்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறன சிறப்புக்களைக் கொண்ட இவர் உயர்நிலை அடைந்து எல்லோருக்கம் வழிகாட்டியாக திகழ்வார் என்று எண்ணிய எனது எண்ணம் இடையில் கருகி விட்டது. அன்னாரின் அகால மறைவு அவரின் குடும்பத்திற்கு மட்டுமல்ல சமூகத்திற்கே பேரிழப்பாகும்.

மரணம் என்பது இறைவன் நியதி என்பதை மனதில் கொண்டு அவரது ஆத்மா இறைவனடியில் சாந்தி அடைய வேண்டும் எனப் பிராத்திக்கின்றேன்.

ஓம் சாந்தி . . . . சாந்தி. .

திருமதி. நவமணி சந்திரசேகரம்,
முன்னை நாள் அதிபர்,
யா/இமையாணன் அ.த.க.வித்தியாலயம்.

# நிஜம் நிழலானது

நேரம் காலம் பார்க்கமாட்டாய் நேர்மையாய் உழைத்து நிற்பாய். நேசண்ணா என்றழைப்பாய் நேயமுடன் இணைந்து நிற்பாய். பலகதைகள் பேசுகையில் பம்பலைச் சேர்த்திடுவாய். சிரித்தபடி பொழுது கழியும். சிந்தையும் நிறைந்திருக்கும். புண்ணியனே உன் தொடர்பால் பெருமை நான் கொண்டேன்டா. பண்பின் பிறப்பிடமே. பாசத்தின் இருப்பிடமே. சேவையை விரைந்து செய்வாய். தேவையை புரிந்து முடிப்பாய். காலங்கள் கரையும் முன்னே காரியங்கள் ஆற்றி நிற்பாய். அன்பனே உன் ஆற்றலெல்லாம் நொடிப்பொழுதில் மறைந்ததென்ன. நிஜ வாழ்க்கை பொய்த்ததென்ன? நிழல் வடிவில் என் நெஞ்சில் கனப்பதென்ன, அன்பனே உன் ஆத்மா சாந்திக்காய் பிரார்த்திக்கின்றேன்.

தங்கவேல்.தவநேசன்
இமையாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒளி சேர்க்க வருவாயா?

முற்றத்திலே நீ வந்தால் முகத்தினிலே ஒளி தவழும். உன் வருகையால் என் வீட்டினில் புன்னகைப் பூக்களே மணம் பரப்பி நிறைந்திருந்தன. மலர்ந்த உன் வதனத்தில் வாட்டம் கண்டதில்லை. அந்நாளில் எமக்கெல்லாம் மகழ்வுதந்தே வாழ்ந்திருந்தாய். இன்று துயரத்தை பரிசளித்து விலகிவிட் மாயமென்ன? உன் பிரிவால் தவிக்க வைத்த கோலமென்ன?

என் வீட்டு முந்தத்து மின்மினிப் பூச்சியாக ஒளிசேர்க்க மீண்டும் நீ வரவேண்டும் எனத் தேடுகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்திக்காய்ப் பிரார்த்திக்கும்

நல்லையா-நாகம்மா குடும்பம்
மதிஇல்லம்
புளியங்கும்
இமையாணன்.

## என் இனிய குறும்பனே

பற்பண்ணா என்றழைப்பாய். பலகதைகள் பேசிநிற்பாய். பொழுதுகள் போவது தெரியாது. தூரங்கள் இருப்பது விளங்காது. நாட்டு நடப்பிலிருந்து நாடகக் கதைகள் என ஆயிரம் விடயம் கதைப்போம். புன்னகை பூத்த முகத்தில் சொல் நகை செழித்து நிற்கும். பகிடிகள் பல விடுவாய். பற்பல குறும்புகள் செய்வாய். வலக்கரம் போலநின்று அருமையாய் செயலாற்றி நிற்பாய் என்ன தவம் செய்தேன் இங்கிவன் இணைந்து நிற்கவென்று இறுமாந்து இருந்தேனடா.

இடியொன்று தலைமீது விழுந்தது போல் உன்பிரிவை அறிந்தேன்டா. சொல்லிழந்து செயலிழந்து சிதைந்து நின்றேன். அன்பனே உன் மறைவு மனதை உருக்குதையா. வலக்கரம் செயலிழந்தது போல் பொல்லாத வலியும் கண்டேன்.

அடக்கம் மனிதர்களை தேவர்களாக்கும என்பதனாலோ நல்லவனே உன் சேவை தெய்வத்துக்கும் தேவைப்பட்டதுவோ. அதனால்தான் விரைந்து உனை தன்பாதம் அழைத்தானோ. உன் ஆத்மாவின் சாந்திக்காய் பிரார்த்திக்கும்

காசிப்பிள்ளை.பத்மநாதன்(பற்பன்)
உடுப்பிட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சுதாகரன்- சங்கீர்த்தன் அவர்கள் பற்றிய கருத்துரை

வடமராட்சி இமையாணன் பகுதியில் பிறந்து வளர்ந்து வாழ்ந்தவன் அமரர் சுதாகரன்- சங்கீர்த்தன்.

இவர் ஒரு சிறந்த விளையாட்டு வீரன் ஒழுக்கக்கட்டுப்பாடு உடையவனும் தலைமைத்துவ பண்புகள் கொண்டவர். மற்றவர்கள் மதிக்கக் கூடிய மனப்பான்மை கொண்டவர். உப்போதும் சுறு நுறுப்பாக தான் சார்ந்த பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பார். இந்த கிராமத்தில் உள்ள பொது அமைப்புக்களில் நிரவாக உறுப்பினராக இருந்தவர். ஒப்படைக்கப்படுகிற பணிகளை தன் திறமை கொண்டு செயற்படுத்தும் ஆற்றல் கொண்ட ஒருவர்.

இமையாணன் கலை இலக்கிய மன்றத்தினால் கொண்டாடப்பட்ட கலை இலக்கிய விழாவிலே காத்தவராயன் சிந்து நடைக் கூத்து நாடகத்திலே ஆரியப்பூமாலை பெண் வேடம் தரித்து தன்னுடைய சிறந்த நடிப்பாற்றலை வெளிப்படுத்தியவர்.

இவ்வாறான ஒருவனா இமையாணன் பிரதேசம் இன்று இழந்துதிருப்பது மிகவும் வேதனைக்குரியது. இது அவரின் குடும்பத்தினருக்கும் பேரிழப்பாகும். இறைவனின் படைப்பில் பிறப்பு இறப்பு நிகழ்ந்தேயாகும். பிறந்தவர் என்றோ ஒரு நான் இறக்கத்தான் வேண்டும். இதுவே இறைவனின் படைப்பும் உலக நியதியாகும். ஆயினும் நல்லவர்களை இறைவன் நீண்ட நாட்கள் மண்ணுலகில் விடுவதில்லை. அவர்களில் அமரர் சங்கீர்த்தனும் ஒருவர். அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் அவரின் குடும்பத்தினர் இந்த இழப்பிலிருந்து மீண்டுவரவும் இறைவன் அருள் புரிய பிரார்த்திகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!!

**த.சுதர்சன்**
கிராம உத்தியோகத்தர்
இமையாணன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில அரிய கருத்துக்கள்

உண்மைகள் நிராகரிக்கப்படும், வெறுக்கப்படும், ஒதுக்கப்படும்... ஆனால் நிச்சயம் ஒருநாள் வெளிப்படும்.

தன்னை நல்லவராகக் காட்டிக் கொள்ள அடுத்தவரைக் கெட்டவராகச் சித்தரிக்கும் எவரும் நீண்டநாள் நல்லவர் வேடத்தில் சுற்றமுடியாது.

உண்மையான நண்பனாக அல்லது உண்மையான பகைவனாக இரு, பாதி நம்பிக்கை உடையவனாகவோ இருக்காதே.

விழுதல் என்பது, வேதனை!
விழுந்த இடத்தில், மீண்டும் எழுதல்
என்பது சாதனை!

அனைவரையும் நம்பு - ஆனால் அனைத்து சூழ்நிலைகளையும் நம்பாதே, இங்கு வீரமாக வீழ்த்தப்பட்டவர்களை விட சூழ்ச்சியால் ஏமாற்றப்பட்டவர்களே அதிகம்.

மோது....! போராடு.... !
விழு... ! அழு.... ! நில்... !
தோல்விகள் வரும்....
வஞ்சனைகள் வரும் ......
சூழ்ச்சிகள் வரும்.....
துரோகிகளும் வருவார்
இவைதான் உன் வெற்றிக்கான சவால்கள் !

மனைவி மகிழ்ச்சியாக இல்லாத குடும்பமும், விவசாயி மகிழ்ச்சியாக இல்லாத தேசமும் நிச்சயம் முன்னேற முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தவனுக்கு குழி தோண்ட நினைக்கும் நேரத்தில்
தனக்கு அஸ்திவாரமே கட்டிக் கொள்ளலாம்.

வெற்றி பெற மூன்று வழிமுறைகள்.
ஒன்று
மற்றவர்களை விட அதிகமாக தெரிந்து கொள்ளுங்கள்
இரண்டு
மற்றவர்களுக்கு அதிகமாக பணியாற்றுங்கள்.
மூன்று
மற்றவர்களை விட குறைவாக எதிர்பாருங்கள்.

நீங்கள் மட்டுமே உங்களுக்குச் சொந்தம்!
உங்களை தவிர வேறு எதுவுமே
உங்களுக்குச் சொந்தமில்லை
என்பது தான் நீங்கள் முதலில் கவனத்தில்
வைக்க வேண்டிய கருத்தாகும்.

நல்லவர்களின் கடினமான
வார்த்தைகள் கசப்பானது தான், ஆனால்
தீயவர்களின் சிரிப்பு விஷம் போன்றது....
ஆளைக்கொல்லும் சக்தியுடையது.....!

நோக்கம் எதுவென்பதை முதலில் தீர்மானி
அதுவே இலக்கு என்பதை உறுதி செய்துகொள்

கையில் பணமில்லையே....
உடலில் வலுவில்லையே...
என்றெல்லாம் யோசித்து நேரத்தை வீணாக்காதே
எதற்கும் பயப்படாதே.... தயங்காதே....!
இலக்கை நோக்கி அடியெடுத்து வை
தொடர்ந்து முன்னேறு
சோதனைகள் விலகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதைகள் தெளிவாகும்
நோக்கத்தை அடைந்தே தீருவாய்
அதையாராலும் தடுக்க முடியாது!

சொல்ல முடியாத சோகங்களும்
வெல்ல முடியாத வாதங்களும்
இழக்க விரும்பாதவற்றை இழப்பதும்
இவையெல்லாம் கொண்டது தான்
" வாழ்க்கை "

பகை பொறாமை ஆகியவற்றை
நீ வெளியிட்டால் அவை வட்டியும்
முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பிவரும்!

மிருகத்திடம் அன்பாக பழகுங்கள்
அதற்கும் மனிதகுணம் வந்துவிடும்
மனிதனிடம் எச்சரிக்கையுடன் இருங்கள்
அவன் எப்போது வேண்டுமானாலும்
மிருகமாகலாம்

உன்னை யாரேனும் நிராகரித்தால்
அதை சந்தோசமாக ஏற்றுக்கொள்
உலகில் சாதனை புரிந்த அனைவருமே
யாரோ ஒருவரால் நிராகரிக்கப்பட்டவர்களே!

மௌனத்தில் உள்ள வார்த்தைகளையும்
உன் கோபத்தில் உள்ள அன்பையும்
யாரால் உணரமுடிகின்றதோ அவர்கள்தான்
உனக்காகப் படைக்கப்பட்ட உண்மையான உறவுகள்

நிராகரிப்புகளின் மூலம் ஒருவனை
நிர்மூலமாக்கி விடலாம் என்று சிலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்கிறார்கள். உண்மையில்
நிராகரிப்புகளுக்கு பிறகுதான்
ஒருவனுடைய விஸ்வரூபமே வெளிப்படுகிறது
புகழை மறந்தாலும் நீ பட்ட
அவமானங்களை மறக்காதே - அது
இன்னொரு முறை உன்னை
அவமானப்படாமல் காப்பாற்றும்!

பயமும் நிறைவேறாத ஆசைகளுமே
எல்லாத் துன்பங்களுக்கும் காரணம்.
தன்னை பூரணன் என்று அறியும் போது
வீண் ஆசைகள் எழாது தனக்கு
மரமில்லை என்பதை அறியும் போது
மரணபயம் நீங்குகின்றது.

வெற்றியை சந்தித்தவன் இதயம்
பூவைப்போல்மென்மையானது!
தோல்வியைச் சந்தித்தவன் இதயம்
இரும்பைவிட வலிமையானது!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுத் தகவல்கள்

- ஈரான் மன்னராக இருந்த ஷா, தங்கத்தால் ஆன கத்தரிக்கோலை கொண்டு தான் ரிப்பன் வெட்டி எந்த திறப்பு விழாவையும் தொடங்கி வைப்பார்.

- வில்லியம் மார்க்ககோனி என்ற அமெரிக்க நீச்சல் வீரர் நீச்சலில் 19 முறை உலக சாம்பியன் பட்டத்தை வென்றார்.

- அன்னப்பறவை என்றாலே வெள்ளை நிறம் தான் நமக்கு நினைவு வரும். ஆனால் ஆஸ்திரேலியாவில் கறுப்பு நிறத்தில் அன்னங்கள் வாழ்கின்றன.

- திமிங்கிலத்தில் இருந்து பெறப்படும் எண்ணெய், ஐரோப்பிய நாடுகளில் விளக்கு எரிக்க பயன்படுகிறது.

- அவுஸ்திரேலியாவில் ஒவ்வொரு நபருக்கும் தலா பத்து செம்மறி ஆடுகள் வீதம் இருக்கின்றன. அதனால் தான் எங்கு பார்த்தாலும் மக்களைவிட ஆடுகள் அதிகம் காணப்படுகின்றன.

- இந்தியாவில் முப்பது கோடிக்கும் அதிகமான எழுத்தறிவு பெறாதவர்கள் உள்ளனர்.

- நெப்போலியனை வென்ற கடற்படை தளபதி நெல்சன் 5அடி 2அங்குலம் உயரமே இருந்தார். நெப்போலியனும் குட்டையானவரே.

- வில்லியம் ஹலோர்ட் என்பவர் கார்டூன் படங்களின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுர்வேதம் மற்றும் சித்த மருத்துவம்

## மூலிகைகளின் பெயர்களும், அதன் பயன்களும்

- அறுகம்புல் பவுடர் - அதிக உடல் எடை கொழுப்பை குறைக்கும், சிறந்த இரத்தசுத்தி
- நெல்லிக்காய்ப் பவுடர் - பற்கள், எலும்புகள் பலப்படும். வைட்டமின் C உள்ளது.
- கடுக்காய்ப் பவுடர் - குடல்புண் ஆற்றும், சிறந்த மலமிளக்கியாகும்.
- வில்வம் பவுடர் - அதிகமான கொழுப்பைக் குறைக்கும், இரத்தக் கொதிப்பிற்கு சிறந்தது.
- வல்லாரைப் பவுடர் - நினைவாற்றல், நரம்பு வளர்ச்சிக்கு சிறந்தது.
- தூதுவளைப் பவுடர் - நாட்பட்ட சளி, ஆஸ்துமா, வரட்டு இருமலுக்கு சிறந்தது.
- துளசிப் பவுடர் - மூக்கடைப்பு, சுவாசக் கோளாறுகளுக்கு சிறந்தது.
- ஆவாரம்பூப் பவுடர் - இதயம் பலப்படும், உடல் பொன்னிறமாகும்.
- ஓரிதழ் தாமரைப் பவுடர் - ஆண்மைக் குறைபாடு, மலட்டுத்தன்மை, வெள்ளை படுதலை நீக்கும்.
- திப்பிலிப் பவுடர் - இருமல், சளி, அலுப்பு, உடல் வலிக்கு சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வேப்பிலைப் பவுடர் - குடல் வால், புழு, அரிப்பு, சர்க்கரை நோய்க்கு சிறந்தது.
- முடக்கொட்டான் பவுடர் - மூட்டுவலி, முழங்கால் வலி, வாதம் போன்றவற்றிற்கு சிறந்தது.

## தேனின் மருத்துவ குணங்கள்

தேனியின் வயிற்றிலிருந்து பலவித நிறங்களையுடைய ஒரு பானம் (தேன்) வெளியாகிறது. அதில் மனிதர்களுக்கு சிகிச்சை உண்டு. நிச்சயமாக இதிலும் சிந்தித்துணரும் மக்களுக்கு ஓர் அத்தாட்சி இருக்கிறது.

தேனின் மருத்துவகுணங்கள் அனைவரும் அறிந்ததே. பின்வரும் தேன் கலவைக்கள் ஆரோக்கிய வாழ்க்கைக்கு உதவும்.

- கண் பார்வைக்கு -

தேனை கரட்சாற்றுடன் கலந்து காலை ஆகாரத்திற்கு ஒருமணி நேரத்திற்கு முன் பருகினால் கண் பார்வை விருத்தியடையும்.

- இருமலுக்கு -

சரியளவு தேன் மற்றும் இஞ்சி சாறு கலந்து அருந்தினால் இருமல், தொண்டைவலி, மார்பு சளி, மூக்கு ஒழுகுதல் மற்றும் மூக்கடைப்பு போன்ற உபாதைகளிலிருந்து நிவாரணம் கிடைக்கும்.

- ஆஸ்துமா -

அரைகிராம் கறுப்பு மிளகை பொடி செய்து மற்றும் இஞ்சி சாறுடன் கலந்து அருந்த ஆஸ்துமா குணமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◆ இரத்தக் கொதிப்பு -

ஒரு தேக்கரண்டி அளவு சாறுடன் இரண்டு டீ கரண்டி தேன் சேர்த்து தினமும் ஒருவேளை சாப்பிடுவது இரத்தக் கொதிப்பிற்கு சிறந்த மருந்தாகும்

◆ இரத்த சுத்திகரிப்பு ∴ கொழுப்பு குறைப்பு

ஒரு குவளை மிதமான சூடுள்ள நீரில் ஒன்று அல்லது இரண்டு தேக்கரண்டி தேனும் ஒரு தேக்கரண்டி எலும்பிச்சை சாறும் கலந்து தினமும் காலைக் கடன்களுக்கு முன்பு பருகவும் இது இரத்த சுத்திகரிப்புக்கும், உடல் கொழுப்பை குரைறப்பதற்கும் மற்றும் வயிற்றை சுத்தமாக்கவும் உதவம்.

## தேனை உட்கொள்ளும்போது கவனிக்கப்பட வேண்டியவிடயங்கள்

- ❖ தேனை சூடான உணவுப் பொருட்களுடன் கலக்கக் கூடாது
- ❖ தேனை சூடாக்குவதைத் தவிர்க்கவும்
- ❖ வெப்பநிலை அதிகமாக உள்ள இடங்களில் வேலை செய்பவர்கள் தேன் உட்கொள்வதை தவிர்க்கவும்.
- ❖ தேனை மழைநீர், கடுகு, நெய், மற்றும் காரமான உணவு வகைகளுடன் ஒருபோதும் கலக்ககூடாது.

தேன் பல மலர்களின்மதுரம் கலந்த கலவையே. அதில் நச்சுதன்மை வாய்ந்த மலர்களும் அடங்கும். நஞ்சு பொதுவாக கார மற்றும் உஷ்ண குணங்களையே கொண்டிருக்கும். ஆகவே தேனை கார மற்றும் சூடான உணவுப் பொருட்களுடன் கலக்கும் போது இந்த நச்சு தன்மைகள் மேலோங்கும் சாத்தியக்கூறு உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லவே இல்லாத நாடுகள் தொடர்பான சில தகவல்கள்

"திரையரங்குகள்" இல்லாத நாடு

பூட்டான்

"தினசரி பத்திரிகைகள்" இல்லாத நாடு

காம்பியா'

" காகங்கள்" இல்லாத நாடு

நியுசிலாந்து

"ரயில்" இல்லாத நாடு

ஆப்பாகானிஸ்தான்

"பாம்புகள்" இல்லாத நாடு

அயர்லாந்து

தனக்கென "தாய்மொழி" இல்லாத நாடு

சுவிட்சர்லாந்து

தனக்கென "உத்தியோகபூர்வ தலைநகரம்" இல்லாத நாடு

நவ்ரு

"பொதுக்கழிப்பறைகள்" இல்லாத நாடு

பெரு

"வாடகைக்கார்கள்" இல்லாத நாடு

பெர்முடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு :

17.06.1996



உதிர்வு :

27.11.2015

அமரர்

## சுதாகர் சங்கீர்த்தனன்

[illegible]

[illegible]

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

2012 (O/L) மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழி நீர் சொரிகின்றோம்



பிறப்பு
1996 . 06 . 17

இறப்பு
2015 . 11 . 27

**அமரர் சுதாகரன் சங்கீர்த்தனன்**

பச்சை வயல்கள் முல்லைக் கொடிகள் எல்லாம்
தென்றல் காற்றின் மீது தவழ்ந்து வரும்
உந்தன் பெயரை சுவாசித்து பதிந்திருந்தன
இன்று நெடுந்துயர் இறைத்துச் சென்று விட்டாய்
பூக்கள், பச்சை வயல்கள், முல்லைக் கொடிகள் எல்லாம்
கண்ணீர் சொரிந்து உதிர்ந்து கொண்டிருக்கிறது.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

கலைமகள் ச.ச. நிலையம்
கலைமகள் முனைப்பள்ளி
கவிஸ் நூலன் காப்புச் சபை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழி நீர் சொரிகின்றோம்

பிறப்பு
1996
.
06
.
17



இறப்பு
2015
.
11
.
27

வாழ்க்கை எனும் சாகரத்தில்
நட்பு எனும் தோணி கொண்டு
நேற்று வரை பயணித்திருந்தோம்
கால பைரவனின் சாகரத்தை நீ கண்டதும்
நட்பு எனும் தோணியை விட்டு
நீ ஏன் பிரிந்தாயோ?

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அமரர் சுதாகரன் சங்கீர்த்தனன்

நளினமான உண்மை பேச்சை நேசிக்கும்
2010 O/L மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் பூக்கள் தூவுகின்றோம்



பிறப்பு 1996 . 06 . 17

இறப்பு 2015 . 11 . 27

## அமரர் சுதாகரன் சங்கீர்த்தனன்

நட்புப் பூக்களால்
வாசம் வரும் என்றிருந்தோம் ...
பாசம் தந்த கீர்த்தனனே..
பாதி வழி போகு முன்னே
பரிதவிக்க விட்டு விட்டு
புஸ்பிக்காமலே உதிர்ந்ததென்ன!

அன்னாரின் பிரிவால் துயர் கொண்டுள்ள அவரது
குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**2015 கலைப்பிரிவு**


[illegible] கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எமது குடும்ப குல விளக்கு அணைந்த
செய்தி கேள்வியுற்று உடன் வந்து
உதவிக்கரம் நீட்டி ஆறுதல் கூறி
உற்றார், உறவினர், நண்பர்களுக்கும்,
தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த
மற்றும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள்
வெளியிட்ட அன்பர்களுக்கும், பொருள் உதவி,
பண உதவி, வாகன உதவி என
அனைத்து வகையிலும் உதவிகள் புரிந்து
எமது செல்வனின் இறுதிச் சடங்கினில்
கலந்து கொண்ட அனைவருக்கும், மற்றும்
இன்று நடைபெறும் அந்தியேட்டி
சபீண்டிகர நிகழ்வுகளில் கிரியைகளை
ஆற்றும் குருமாருக்கும், கலந்து சிறப்பிக்கும்
அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்

நன்றி




பூவத்தோட்டம்,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேகானந்தர் பொன்மொழிகள்

01. எல்லா துன்பங்களுக்கும் இரண்டு மருந்துகள் உள்ளன.
ஒன்று காலம், இன்னொன்று மௌனம்.

02. உலகம் ஒரு விசித்திரமான கல்லூரி இங்கே பாடம்
சொல்லிக்கொடுத்து தேர்வு வைப்பதில்லை. தேர்வு
வைத்த பிறகே பாடம் கற்பிக்கப்படும்.

03. மகிழ்ச்சி என்ற உணர்ச்சி மட்டும் இல்லாவிட்டால்
வாழ்க்கை சுமக்கமுடியாத பெரிய சுமையாகிவிடும்.

04. அதிகம் பேசாதவனை உலகம் அதிகம் விரும்புகிறது.
அளந்து பேசுபவனை அதிகம் மதிக்கிறது. அதிகம்
செயல்படுபவனை கை கூப்பித் தொழுகிறது.

05. எதை இழந்தீர்கள் என்பதல்ல முக்கியம் என்ன மிச்சம்
இருக்கிறது என்பதே முக்கியம்.

06. முன்னோக்கிச் செல்லும் போது கனிவாயிரு ஒருவேளை
பின்னோக்கி வரநேரிட்டால் யாராவது உதவுவார்கள்.

07. நேற்றைய பொழுதும் நிஜமில்லை நாளைய பொழுதும்
நிச்சயமில்லை இன்றைக்கு மட்டும் நம் கையில்.

08. மகிழ்ச்சியால் நீ வீணாக்கிய தருணங்களெல்லாம் வீணானவையல்ல.

09. பழமையைப் பற்றி ஒன்றுமே தெரியாமல்
புதுமையைச் சிறப்பாகப் படைக்க முடியாது.

10. நீங்கள் விரும்புவது ஒருவேளை உங்களுக்கு
கிடைக்காமல் போகலாம். ஆனால் உங்களுக்கு தகுதியானது
கண்டிப்பாக கிடைத்தே தீரும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Selva Printers V.V.T Road Navalady, Uduppiddy